செ.வெ.எண். 13/ஜூன் தேதி : 05.06.2016

# <u>பத்திரிக்கை செய்தி</u>

## உலக சுற்றுச்சூழல் தினம் (World Environment Day) கொண்டாடப்படுவதினையொட்டி தருமபுரி ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.







உலக சுற்றுச்சூழல் தினம் (World Environment Day) இன்று (05.06.2016ல்) தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பண்டி கங்காதர், இ.கா.ப., மாவட்ட வன அலுவலர் திரு.திருமால்,இ.வ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சங்கர், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு.ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் வளாகத்தின் அருகாமையில் உள்ள மாவட்ட வன அலுவலகத்தில் 108 வகை செடிகளான வேம்பு, மகிளம், புங்கன், நாவல், பூவரசு, வில்வம், ஆள், இலுப்பை போன்றவைகள் நடவு செய்யப்பட்டது.

மாவட்ட வன அலுவலக வளாகத்தில் எழுப்பப்பட்டுள்ள இயற்கை மருந்துவ பூங்காவினை திறந்து வைத்து, ஒவ்வொரு செடியினுடைய மருத்துவ பயன்களை அறிந்துக் கொண்டார். இதனை பற்றி பொதுமக்களுக்கு வனத்துறை மூலம் தெரிவிக்கவும், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இதுபோன்ற மருத்துவ செடிகளை நட்டு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஒகேனக்கல் முதலைகள் மறுவாழ்வு மையம் தொடர்பாக தருமபுரி மாவட்ட வன அலுவலர் அவர்களால் தயார் செய்யப்பட்ட கையேட்டு புத்தகத்தினை வெளியிட்டார். இதன் முதல் பிரதியினை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பண்டி கங்காதர், இ.கா.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும் மாநில பறவை மரகத புறா மற்றும் மாநில பூ செங்காந்தல் மலர் தொடர்பான ஸ்டிக்கரையும் வெளியிட்டார். இதே போன்று உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி தருமபுரி மாவட்டத்தில் உள்ள தருமபுரி, நல்லம்பள்ளி, பாலக்கோடு, காரிமங்கலம், பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், மொரப்பூர் வட்டார வளர்ச்சிக்கு உட்பட்ட ஒவ்வொரு வட்டார வளர்ச்சி பகுதிகளில் 50 செடிகள் வீதம் 400 செடிகள் அந்ததந்த வட்டார வளர்ச்சி துறை மற்றும் பிற துறை அலுவலர்களால் நடப்பட்டது.

மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் 68வது பிறந்தநாள் தொடர்பாக மாபெரும் மரக்கன்று நடவு திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட1,32,253 நாற்றுகள் வனத்துறையும் மாவட்ட ஊரக வளர்ச்சித்துறையும் இணைந்து மகாத்மாகாந்தி ஊரக திட்டத்தின் கீழ் நல்லம்பள்ளி, தருமபுரி, பாலக்கோடு, காரிமங்கலம், பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், மொரப்பூர் வட்டார வளர்ச்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 2016–17ம் ஆண்டில் செடிகள் நடப்பட உள்ளது என தெரிவித்தார். தமிழ்நாடு உயிர்பன்மை திட்டத்தின்கீழ் தனியார் நிலங்களில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் 32 கிராமங்களில் தேர்வு செய்யப்பட்ட விவசாய நிலத்தில் வனத்துறையால் 6,70,000 மரக்கன்றுகள் இலவசமாக இந்த ஆண்டு நடப்பட உள்ளது.

தேசிய காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் 2016ம் ஆண்டு 1,90,000 செடிகள் நடப்பட உள்ளது எனவும், 2016–ம் ஆண்டில் வனவிலங்கு வேட்டையாடுதல் மற்றும் அதில் உள்ள பொருட்களை கொண்டு வாணிபம் செய்வதை தடை செய்ய (Zero tolerance towards wildlife products trade) உறுதி பூண்டுள்ளதாலும், வனவிலங்கு பொருட்களில் வாணிபம் செய்வது 1972 வனஉயிரின சட்டத்தின்படி 7 ஆண்டு வரை தண்டனை கிடைக்கும் என்பதால் வனவிலங்குகளை பாதுகாத்து சுற்றுச்சூழலை மேம்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி பேவனூர் வனச்சோதனை சாவடியிலிருந்து ஒகேனக்கல் பகுதி வரை உள்ள பகுதிகளில் நெகிழிகள் (Plastic) பிற குப்பைகள் அகற்றும் பணி தருமபுரி மாவட்ட வன அலுவலர், தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் பணியினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியின் போது அங்குள்ள பொது மக்களிடம் சுற்றுச்சூழல் காப்பது குறித்தும், வன உயிரினங்களை காப்பது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டு, ஒகேனக்கல் வனப்பகுதி பிளாஸ்டிக் இல்லாத பகுதியாக மாற்றப்படவுள்ளதால் குப்பைகளை போடும் ஒவ்வொருவரிடமிருந்து ரூ.1000/– அபராதக் கட்டணம் வசூலிக்கப்படும் எனத் தெரிவித்தார். எனவே பொதுமக்கள் ஒகேனக்கல் பகுதியின் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியின் போது மண்வளப்பாதுகாப்பு அலுவலர், மேட்டூர் மண்வளப்பாதுகாப்புத் திட்டக் கோட்டம் திரு.இராஜேந்திரன், உதவி வனப்பாதுகாவலர் (பயிற்சி) செல்வி. பிரியதர்ஷினி, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு. பிரகாஷ், வனச்சரக அலுவலர் தருமபுரி சரகம் திரு. இராஜலிங்கம், ஒகேனக்கல் வனச்சரக அலுவலர், திரு. தங்கராஜ், வனவர்கள், ஊட்டமலை வனக்குழு தலைவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அப்துல்கலாம் தன்னார்வு மன்ற தொண்டர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.